
# நினைவுகளின் சங்கமத்தில்.....



அமரர்.

## வேலுப்பிள்ளை விவேகானந்தா

அவர்களின்

## அமரத்துவம் குறித்த நினைவு மலர்

19.08.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் -
தீராதபக்கங்களில்
ஒரு பறவையின்
வாழ்வை
எழுதிச் செல்கிறது ......

- தருமுசிவராமு -

# சமர்ப்பணம்

பெயரில் மட்டுமல்ல
சொல்லில்
செயலில்
மற்றவர்க்கு உதவும்
வாழ்க்கை முறை என
தன் சிந்தனை வெளியெங்கும்
சுவாமி விபுலானந்தரையே
பின்பற்றி வாழ்ந்த
எம் அன்புத் தெய்வம்
அமரர் விவேகானந்தா
அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை,**

**கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே மகிமை**

**பெறுவதன் இரகசியம்"**

"எழுந்திருங்கள், உறுதியுடனும், தைரியத்துடனும் இருங்கள். பொறுப்பு முழுவதையும் உங்கள் தோள்களிலேயே சுமந்து கொள்ளுங்கள். உங்கள் விதிக்கு நீங்களே காரணம் என்பதை புரிந்துகொள்ளுங்கள்"

**- சுவாமி விவேகானந்தர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள்
# நினைவஞ்சலி



## அமரர் திரு. வேலுப்பிள்ளை விவேகானந்தா

மலர்வு
19.08.1956

உதிர்வு
20.07.2012

திதி வெண்பா

நந்தனமாம் நல்வருடம் நாடிவரும் ஆடிதனில்
சந்திரனார் வளர்ந்து வரும் காலம் – புந்தியினர்
போற்றும் விவேகானந்தா பொன்னுலகு சேர்ந்த திதி
சாற்றும் துதியை யெனச் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருள(ல்) வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

மீன்பாடும் தேநாடாம் மட்டுநகரில் கலைமகள் திருமகள் பிள்ளையார் கடாட்சம் பெற்று விளங்கும் கல்லடி உப்போடையில் பேச்சியம்மாளின் புண்ணிய பெரும்பேறாய் வேலுப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளுக்கு 1956ம் ஆண்டு ஆவணி மாதம் 19ம் திகதி இரண்டாவது புத்திரனாய் விவேகானந்தா அவர்கள் அவதரித்தார். இவருக்கு ஏற்றாற் போல் பாசமிகு உடன்பிறப்புக்களும் நான்கு சேர்ந்து கொண்டனர்.

இவர் கல்லடி உப்போடையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பில் திருமலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மகேஸ்வரியின் அன்பு மகனும் கமலாதேவியின் (முகாமையாளர், இலங்கை வங்கி ஏறாவூர்) அன்புக் கணவரும், பிரஸ்ணவியின் அன்பு அப்பாவும் ஆவார். இவரின் சகோதரர்கள் இராமக்கிருஷ்ணா (இ.வங்கி மாவட்டக் காரியாலயம், மட்டக்களப்பு), நிவேதிதா (இசை ஆசிரியை, லண்டன்), நளாயினி (லண்டன்), சுகந்தி (ஆசிரியை) ஆவார்கள். தயாநிதி (ஆசிரியை), இந்திரகுமார் (ஆசிரியர், லண்டன்), வினாயகமூர்த்தி (லண்டன்), சிறிதரராஜ் கமலாவின் சகோதரர்களான அமரர் நடராஜா, சொக்கலிங்கம், குலசேகரம், தங்கவடிவேல், நல்லரெத்தினம் ஆகியோரின் மைத்துன ருமாவார். சந்திர திவ்யா, சந்திர வித்தியா, பிரஷாந்தன், கீர்த்தனா, சகானா, லக்ஷனா, விபுஷ்மா ஆகியோரின் அன்பு மாமாவும், சதுர்ஷன்காந்தின் சித்தப்பாவும் ஆவார். இளம் பராயத்தில் இவர் தந்தை தாயாரால் நரேன் என்று தான் அழைக்கப்பட்டார். இவர் இளம்பராயத்தில் சுறுசுறுப்பாகவும் வடிவழகனாகவும் திகழ்ந்தவர். இவரின் தாய் தந்தை கடவுள் பக்தி மிக்கவர்கள். ஆலயங்களில் பிரார்த்தனைகளில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். இவர் விளையாட்டுத் துறையில் ஊக்கமுடையவர். நினைத்த காரியத்தை தனித்து நின்றே சாதிப்பவர். இவர் சொல்லுக் கேற்ப தாய் தந்தையரும் இவரின் மனம் நோகாது நடந்து கொண்டனர்.

இவர் இளமைக் கல்வியை விவேகானந்த வித்தியாலயத்திலும், பின் சிறப்புக் கல்வியை சிவானந்தா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மட்/புனித மிக்கேல் கல்லூரியிலும் தொடர்ந்து கற்று கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றார். பாடசாலைப் படிப்பு முடிந்து சில வருடங்களின் பின் இவருக்கு இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் வேலை கிடைத்தது. அதைக் கண்ட தாய் தந்தை சகோதர சகோதரிகள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். வங்கியில் சேர்ந்தமை பற்றி தற்பெருமை சிறிதுமின்றி எல்லாரையும் அரவணைத்து, உதவிகளைச் செய்து கொடுத்தவர். முகமலர்ச்சியுடன் மக்களை வரவேற்று உதவிபுரிவார். அவர்களும் அவரைப் பாராட்டுவார்கள். வங்கியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் கலியாணபந்தம் ஏற்பட்டு அங்கே பணிபுரிந்து கொண்டிருந்த ஆரையம்பதியைச் சேர்ந்த கந்தப்பன் கமலாதேவியை தாய் தந்தையின் ஆசியுடன் வாழ்க்கைத் துணையாய் பெற்றார். பல ஆண்டுகள் உருண்டோடின. இவர்களுக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு பிரஷ்ணவி என்று பெயர் சூட்டி பாசமாய் வளர்த்தார்கள்.

அதற்கிடையில் தந்தை 1990ம் ஆண்டு மாரடைப்பினால் உயிர் துறந்தார். அவரைத் தொடர்ந்து தாய் 1995ம் ஆண்டு உயிர் துறந்தார். இப்படியிருக்கும் நாளில் தங்கள் இருவரின் தனி முயற்சியினால் திருமலை வீதியில் ஓர் வளவு வாங்கி மூன்று மாடி கொண்ட மனையை அமைத்து சந்தோஷமாக வாழ்ந்தார்கள். பின்பு மட்டக்களப்பில் வேலை செய்து கொண்டிருந்த போது காத்தான்குடி இலங்கை வங்கிக்கு இடமாற்றப்பட்டார். காத்தான்குடியில் வேலை செய்து கொண்டிருக்கையில் சில காலங்களின் பின் மீண்டும் மட்டக்களப்பிற்கு மாற்றப்பட்டார். பல வருடங்கள் சென்றன. மட்டக்களப்பில் வங்கி முகாமையாளர் பதவி கிடைத்தது. பின் செங்கலடிக்கும், வாழைச்சேனைக்கும், ஏறாவூருக்கும், இறுதியாக ஓட்டமாவடிக்கும் இடம் மாற்றப்பட்டு அங்கே முகாமையாளராகப் பணி புரிந்தார். இவர் கடவுளில் பக்தி மிக்கவர். பிள்ளையார், பேச்சியம்மன் ஆகிய இருவரையும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சென்று வழிபடுவார். கந்தசஷ்டி விரதம், சிவன்ராத்திரி விரதம் இவை இரண்டையும் அனுட்டிப்பார். விஷேடமாக சிவன்ராத்திரி விரதத்தில் அபிஷேகப் பூசை கட்டி வழிபடுவார். இப்படி சந்தோஷமாக வேலை செய்து கொண்டிருக்கையில் அவரை நீண்ட காலம் அவ்வேலையில் இருக்க வைக்க கடவுள் விரும்பவில்லை போலும் அவரை நோய் பற்றிக் கொண்டது. வேலை செய்ய மனம் இல்லாத படியால் ஓய்வூதியம் பெறும் நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அடிக்கடி வைத்தியசாலை செல்லும் நிலையும் ஏற்பட்டது. கொழும்பு போதனா வைத்தியசாலையிலும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் மாறி மாறிச் சிகிச்சை பெற்று வந்தார். நோயும் குணமாகாமல் முற்றிக் கொண்டே வந்தது. பேச்சியம்மாளை ஒவ்வொரு வருடமும் தன் கையினால் கழுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இவரால் இவ்வருடம் அம்மாளைக் கழுவப் போகக்கூட முடியவில்லை. நோய் முற்றிய காரணத்தினால் உடல் நிலை இழந்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு உடனே கொண்டு சென்று சிகிச்சைகள் பலனளிக்காது பார்க்கப்பட்ட நிலையில் 20.7.2012 வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் பேச்சியம்மாளின் கடாட்சத்தால் உடலில் இருந்து இவரது உயிர் பிரிந்தது. இச் செய்தி கேட்டு உற்றார், உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர். இழக்க முடியாததை இழந்து விட்டோம் என்று ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கி கதறி அழுதனர்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மானிலத்தீர்

சைவ சித்தாந்தத்தின்படி ஓர் ஆன்மாவிற்கு கிடைக்கக்கூடிய அதியுயர் பேறு சித்தியடைதலே. எனவே ஆன்மா சிவபதங்களில் சித்திபெற பிரார்த்திப்பதே அவர் மனைவி பிள்ளை உற்றார் உறவினர்கள் செய்யக்கூடிய கைமாறாகும். உடலின் உயிர்களின் நிலையாமையை உணர்த்துவது போல அவரின் பூதவுடலைப் பார்த்த மனைவி உற்றார் உறவினர்கன் சகோதரசகோதரிகள் மருமக்களின் உணர்ச்சி பிரபாகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கதறி கண்ணீர் வடித்தார்கள்.

**பிறப்புக்கு நாட்குறிப்பார், பிறந்து வளர்ந்த பின்பு இறப்புக்கு நாட் குறிப்பார் யார்?**

இறப்பு ஒன்றே உண்மையானது அப்படி நம் மத்தியிலே எங்களோடு வளர்ந்து சுக துக்கங்களில் பங்கெடுத்து மறக்க முடியாத நிலையை நிலைநாட்டி மறைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து இறைவன் அடிசேர வேண்டுமென பிரார்த்திப்பதை விட வேறு என்ன செய்ய முடியும்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இவ்வண்ணம்

**இராசமணி குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“விவேகானந்தா”

# ஒரு சமூகவியலாளரின் நினைவுகள்

எல்லா மதங்களும் எல்லாச் செயல் முறைகளும் எல்லா வழிபாட்டு முறைகளும் ஒரு இலட்சியத்தை நோக்கியே நம்மை அழைத்துச் செல்கின்றன.

நான் புரிந்துகொண்ட படி, அந்த இலட்சியம் முக்திதான்; சுதந்திரந்தான்; நம்மைச் சுற்றி நாம் காண்கின்ற ஒவ்வொன்றும் அணுவிலிருந்து மனிதர் வரையில் உயிரற்ற ஜடப் பொருளணுவிலிருந்து உலகின் மிகச் சிறந்த உணர்வுப் பொருளான மானிட ஆன்மா வரையில் எல்லாமே சுதந்திரத்திற்காகவே போராடிக்கொண்டிருக்கின்றன. சொல்லப் போனால் பிரபஞ்சம் முழுவதுமே சுதந்திரத்துக்கான இந்தப் போராட்டத்தின் விளைவு தான்.

தன்னலமற்ற செயலின் மூலம் மனித வாழ்வின் இலட்சியமான அந்தச் சுதந்திரத்தை அடைவதுதான் கர்மயோகம். தன்னலச் செயல் ஒவ்வொன்றும் நம் இலட்சியத்தை அடைவதிலிருந்து நம்மை விலக்குகின்றது. சுயநலமற்ற செயல் ஒவ்வொன்றும் நம்மை அந்த இலட்சியத்தை நோக்கி இட்டுச் செல்கின்றது. அதனால்தான் ஒழுக்கம் என்பதற்குக் கொடுக்கின்ற ஒரே விளக்கம் இதுதான். சுயநலமாக உள்ளது தீயொழுக்கம், சுயநலமின்மையாக உள்ளது நல்லொழுக்கம்!

ஆனால் விளக்கங்களுக்கு வரும் போது விஷயம் அவ்வளவு சுலபமாகத் தெரியவில்லை. உதாரணமாக நான் முன்பே சொல்லியது போல் சூழ்நிலை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரே செயல் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் சுயநலமற்றதாக இருக்கும். மற்றொரு சூழ்நிலையில் சுயநலமுடையதாகிவிடும். எனவே நாம் ஒரு பொதுக் கருத்தை மட்டுமே கூற முடியும்; விள்க்கங்களைப் பொறுத்த வரையில் அந்தச் செயல் நிகழ்கின்ற காலம், இடம், சூழ்நிலை அவற்றைக் கருத்தில் கொண்டு முடிவு செய்வதற்கு விட்டுவிட வேண்டும்.

எனவே கர்மயோகம் என்பது சுயநலமின்மை மற்றும் நற்செயல்களைச் செய்வதன் மூலம் சுதந்திரம் பெற வைக்கின்ற ஒரு நீதி நெறிக் கோட்பாடாகும். ஒரு நெறியாகும். கர்மயோகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவித கோட்பாட்டையும் நம்ப வேண்டும் என்ற அவசியமில்லை. அவனுக்குக் கடவுளிடம் கூட நம்பிக்கை வேண்டும் என்பதில்லை. ஆன்மா எது என்பது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தத்துவங்களையும் பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை. சுயநலமின்மையை உணர வேண்டும் என்ற சிறப்பான சொந்த இலட்சியம் அவனுக்கு உள்ளது. அதை அவன் தன் சொந்த வழியில் நிறைவேற்றிக் கொள்ளவும் வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் இந்த உண்மை அவன் முன்னே பிரகாசித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ஏனெனில் ஞானி தன் அறிவின் மூலமாகவும் அக விழிப்புணர்வின் மூலமாகவும், பக்தன் தன் அன்பின் மூலமாகவும் தீர்வு காண்கின்ற அதே பிரச்சினையை ஒரு கர்மயோகி எந்தவிதமான கொள்கை மற்றும் கோட்பாட்டின் துணையின்றி வெறும் செயலின் மூலம் மட்டுமே தீர்வு காண வேண்டியவனாக இருக்கின்றான். இது கர்மயோகம் பற்றி 1896 ஜனவரி 10இல் நியூயோர்க் நகரில் வைத்து சுவாமி விவேகானந்தர் கூறியவற்றிலிருந்த எடுத்தாளப்பட்ட சில கூற்றுக்கள் (சகோதர சகோதரிகளே....... விவேகானந்த இலக்கியம் ஞானதீபம் 11 சுடர்களின் திரட்டு பக்கம் 93-94)

அமரர் வேலுப்பிள்ளை விவேகானந்தாவை எண்ணுந்தோறும் என்னுள் எழுந்த சிந்தனைப்படிவம் இது. அமரருடன் இணைத்துப் பார்க்கவும் தோன்றுகின்றது.

**கர்மயோகி :** அமரரின் வாழ்வின் சுழற்சிச் செயற்பாடுகளைக் கூர்ந்து நோக்கும் போது அவரது உலக வாழ்வின் 5ம் அகவைக்குள் சுவாமி விவேகானந்தர் கூறிய ஒரு கர்மயோகிக்குரிய பண்பியற் கூறுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு வாழ்ந்து காட்டினார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

நான் எட்ட நின்றே அவரை நோக்கினேன்; ஆனாலும் அவருடன் தொழில் செய்தவர்கள் அவர் நேசித்த நண்பர்கள் உறவினர்கள் அவரை நேசித்தவர்கள்.... என்று அனைவரும் அவரது விரைந்து செயற்பட்ட தன்னலங்கருதாத பண்பியலையே முன்னிறுத்திப் பேசுவதை அறிய முடிகின்றது. இது எல்லோரிடத்தும் காண்பதரிது. வினையாற்ற வந்தவர்கள் வினைப் பயன் முடிந்ததும் விரைந்து மறைந்து விட்டதே. "உலக வரலாறு" அமரரின் வாழ்வுக்குள்ளும் அதனைக் காண்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு இலங்கை வங்கியின் பழைய வாடிக்கையாளர்களில் நாங்களும் அடக்கம். "நடா ஐயா நீங்க என்ன போளினில நிற்கிறியள். இங்க கொண்டுவாங்க". நான் மறந்தாலும் வந்து பறித்து வேலையை விரைந்து முடித்துத் தந்து விடுவார் விவே. அன்று ஓங்கி ஒலித்த இனிய குரல் இன்றும் எம் மத்தியில் இல்லை. மனம் வெந்து தணலாகின்றது அந்தக் கர்மயோகிக்காக. விதி அது.

**வாழ்வியல் :** மட்டக்களப்பு கல்லடி உப்போடையைச் சேர்ந்த அமரர்களான வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளின் இளைய மகனாக 1956.08.19ல் பிறந்தவர் விவேகானந்தா. உடன் பிறப்புக்களாக இராமக்கிருஷ்ணா, நிவேதிதா, நளாயினி, சுகந்தி ஆகியோர்கள் உள்ளனர்.

அமரரின் தந்தை வேலுப்பிள்ளை ஐயா அவர்களின் சமய இலக்கியத் தொண்டுகளில் நானும் இணைந்து செயற்படும் பேறுபெற்றவன் சைவப் புலவர் கிருஷ்ணப்பிள்ளை மாஸ்டர் என்றே அழைப்பர். ஆலயங்களில் தேவாரங்கள் கூட்டுப் பிரார்த்தனைகளைப் பற்றோடு பாடுவதில் வல்லவர். மிகமிகச் சுறுசுறுப்பானவர். சுவாமி விபுலானந்தா முதலான ஞானத் துறவிகளுடன் அணுக்கத் தொடர்வும் ஈடுபாடும் கொண்டு ஸ்ரீராமக்கிருஷ்ணமிஷன் அறப்பணிகளின் பால் ஈர்க்கப்பட்டவர். அதனால் தன் மக்களுக்கும் அந்நிறுவனம் சார்ந்த பெயர்களையே வைத்து மகிழ்ந்தவராகக் காணப்பட்டவர். அவர்களது வளர்ப்பின் சிறப்பே மக்களில் வெளிப்படுகின்றது. அமரர் **'விவே'** நற்சான்று.

மட்டக்களப்பில் **பண்டிதர் செ.பூபாலபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, இலக்கிய கலாநிதிகளான F.X.C.நடராசா, சா.இ.கமலநாதன்** மற்றும் **கிருஷ்ணப்பிள்ளைப் பண்டிதர்** போன்றோர் வரிசையில் அமரரின் தந்தையும் சிறப்பிடம் பெற்றவர். அவ்வாறே அவர் பெற்றுக்கொண்ட சம்பந்திமார்களான அமரர்களான சாமித்தம்பி மாஸ்டர், இளையதம்பி அதிபர், சீவரெத்தினம் (Prisin Guard), நவரெட்ணம், கந்தப்பன் என்று நற்பணியியல் சேவையாளர்களாகத் திகழ்ந்தவர்கள் என்பதை அறிவேன்.

ஒரு சிறந்த சைவப்பாரம்பரியத்தின் கட்டமைப்பில் பிறந்து வளர்ந்த ஆரையம்பதியைச் சேர்ந்த மற்றொரு சைவப்பாரம்பரியத்தில் மனையாளைப் பெற்றுச் சிறந்து வாழ்ந்து அமரத்துவம் பெற்றுவிட்ட சிறப்பியல்பாளர் **விவே**. இது நற் பிறப்பையும் நல்வாழ்வையும் குறித்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'**வீவே**' தன் ஆரம்பக் கல்வியை தாயதி வீட்டின் அருகிருந்த விவேகானந்தா சைவப்பாடசாலையில் (தற்போது விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்) ஆரம்பித்து உயர் கல்வியை சிவானந்த வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டவர். மேலும் மட்டக்களப்பு மத்திய கல்லூரி, சென்.மைக்கல் ஆகியவற்றிலும் பயின்றதை அறியமுடிகிறது. கல்வி கேள்விகளிலும், கணிதத்திலும் சிறந்து விளங்கிய மாணவனாக அறியப்படுகின்றார். கிராமிய விளையாட்டுக்களில் சிறந்து விளங்கியதாக இவருடன் பயின்ற கணக்காளர் தேவகாந்தன் கூறினார். சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட சிறந்த விளையாட்டு வீரனாகவும், அதன் உறுப்பினர்களை உற்சாகமூட்டி வளர்த்தவராகவும் அக்கழகத்தின் தலைவர் திரு.கி.பாஸ்கரன் அவர்களால் அன்போடும் மதிப்போடும் என்னிடம் நினைவு கூரப்பட்டார்.

**தொழில் :** தனது 22 ஆவது வயதிலேயே 20.11.1978ல் மட்டக்களப்பு இலங்கை வங்கியில் நியமனம் பெற்றுக்கொண்டு 33 வருடம் வங்கியில் சேவை செய்து 19.08.2011இல் ஓய்வு பெற்றுக் கொண்டவர்.

இப்பணிக் கடமையில் சாதாரணதர எழுதுனராக சேர்ந்து 2006இல் நிறைவேற்று உத்தியோகத்தர், 2008இல் உப முகாமையாளராகவும் சேவை செய்யும் வாய்ப்புக் கிட்டியிருந்தது.

இக்காலப்பகுதியில் மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, ஓட்டமாவடி ஆகிய இடங்களில் தமிழ், முஸ்லீம் பிரதேசங்களில் பணியாற்றிய அனுபவங்களையும் பெற்றுக் கொண்டவர்.

இவரது சேவையைப் பாராட்டி இலங்கை வங்கி விருது வழங்கி கௌரவித்ததையும் மறக்க முடியாதுள்ளது.

ஒரு வங்கியியலாளருக்கு ஏற்படக்கூடிய கௌரவங்கள், நெருக்கடிகள், அழுத்தங்கள் அனைத்தையும் சமாளித்து நடைபயின்றவராகவும் வாடிக்கையாளர்களால் நேசிக்கப்பட்டவரா கவும் இவரைக் காண முடிகின்றது.

**திருமணம் :** இலங்கை வங்கியின் மற்றோர் உத்தியோகஸ்தராகப் பணி புரிந்த செல்வி கந்தப்பன் கமலாவைக் காதலித்து 10.04.1986இல் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியான இல்வாழ்வைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய பெருமகன். இடர்மிகு வாழ்வையும் சுவைமிகு மகிழ்வுடன் நடத்திப் பெருவாழ்வு வாழ்ந்தவர். அண்டியோர்க்கு உதவினார், நேசித்தார், நேசிக்கப்பட்டார்.

**துயரம் :** துணையிழந்து தவிக்கும் மனையாளையும் மகளையும் உறவுகளையும் நினைக்க மனம் கனக்கின்றது.

விவேயை சில காலத்தின் முன் கொழும்பு 'டேடன்ஸ்' மருத்துவமனையில் சந்தித்ததே என் கடைசி நிகழ்வு. மைத்துனர் சொக்கலிங்கம் மற்றும் அவர் மனைவி கமலா ஆகியோர் அருகிருந்து பணிபுரிந்து அவரை வலுப்படுத்திக் கொண்டிருந்தனர். அவரும் தனக்கிருந்த வலி உபாதைகளை வெளிக் காட்டிக் கொள்ளாது என்னோடு மிகவும் கலகலப்பாகப் பேசி மகிழ்ந்தது நிழலாடுகின்றது.

ஒரு சமூக சேவகனை, கர்மயோகியைத் திடீரென இழக்க நேரிட்டது துரதிஷ்டமே. வாழ்வின் நிலையாமைத் தத்துவத்தை நோக்கி மனம் ஆற்றுப்படுத்தப்படுகின்றது.

**சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் இக்காலப் பகுதி இது. பெற்றோர் சுவாமி விவேகானந்தரை நினைத்து அவர் நாமத்தைத் தன்பிள்ளை மேல் சூடி மகிழ்ந்த போது அவர்களின் கனவை நனவாக்கி வாழ்ந்து காட்டிய 'விவே' யின் இழப்பு துயரம் மிகுந்ததே. அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்துக்காக இறைவன் திருவருள் வேண்டுகின்றோம்.**

ஆறுதலற்றிருக்கும் மனைவி மக்கள் உறவுகள் அனைவரதும் வாழ்வு சிறப்புறவும் சாந்தி நிலவவும் திருவருள் கூடுவதாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

நண்பன் விவேயின் இனிய நினைவுகளுடன்,
**காசுபதி நடராசா குடும்பம்**
08.08.2012

42, 2ம் குறுக்கு வீதி,
கல்லடி வேலூர்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்நிலை வாழ்க்கை வழிநின்ற நண்பன் – "விவே"

"நெருநல் உள்ளொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

"நேற்று இருந்தவர் இன்றைக்கு இல்லையே என்னும் பெருமையைக் கொண்டதே இப்பூவுலகு" என்ற வள்ளுவரின் நிலையாமைக்கான கூற்று இது. ஆயினும் மானிட வாழ்வின் பேறானதை ஒவ்வொருவரதும் செயற்பாட்டின் அளவுகோலைக் கொண்டே கணிப்பிட முடியும். அது பிறர்க்குதவும் நற்செயலைக் கொண்ட பண்பியலை அடிப்படையாகக் கொண்டமைந்து விட்டால் மரணத்தின் பின்னும் வாழ்வு நிலைத்திடும்.

இவ்வகையில் நண்பன் 'விவே' முதன்நிலை வாழ்க்கை வழிமுறை கொண்டவராக பிறர்க்குதவு திறன் கொண்டவராக வாழ்ந்து சிறந்து அமரத்துவம் பெற்று விட்டவர். உயர்வான சிந்தனை, எளிமை, இனிமை, மகிழ்ச்சி என்றவாறு இவர் குணவியல்பின் சிறப்புக்களை கூற முடியும். சிறு பிள்ளைத் தனத்துடன் பிரச்சினைகளை இலகுபடுத்தி வெற்றி கொள்ளும் திறனாளியாகக் காட்சியளிப்பவர். எந்தவொரு சிறு விஷயமென்றாலும் மிகுந்த கரிசனையோடும் அர்ப்பணிப்போடும் உதவுபவராகக் கண்டிருக்கின்றேன்.

தனது கடமைப் பணிகளில் தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் சமத்துவமாக மதித்துத் தன்பணி செய்தவராகக் கூறுகின்றனர். சராசரி மனித வாழ்வின் நெருக்கடிகள் பலவீனங்கள் அவரை ஆட்கொண்டிருந்த போதிலும் அவைகளை கடந்தும் மக்களுக்கு உதவிய பெருமகன். கால்நூற்றாண்டுகளுக்கும் மேற்பட்ட குடும்ப உறவு எங்களுக்குள் நிலை கொண்டிருந்தது. அதனால் அவரது மேன்மைக் குணங்களை எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. அவருக்கிருந்த இடர்கள், நோய்கள் அனைத்தையும் மலர்ந்த முகத்துடன் ஏற்கப் பழக்கப்பட்டுக் கொண்டவராக அவர் காணப்பட்டார்.

ஒரு குறுகிய காலத்துக்குள் தன் அண்ணன் நல்லரெத்தினத்தை இழந்த காயம் ஆறுமுன் ஆருயிர்த்துணை இழந்து தவிக்கும் மனைவி மற்றும் குழந்தை, உடன் பிறப்புக்கள், உறவுகள் அனைவரையும் நினைத்து வருந்துகின்றோம். அவர்களுக்கு இறைவன் திருவருள் நிறைய வேண்டி அமரரின் ஆன்மா பிறவாப் பேரின்பப்பெருவாழ்வு பெற்றுய்யப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**மா. உதயகுமார்**
உள்ளூராட்சி ஆணையாளர்,
உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளம் கவர்ந்த விவே எங்கு சென்றாய்?

சில இழப்புக்கள் ஈடுகொடுக்க முடியாதவை. "விவே" யின் இழப்பும் அது போலத்தான்.

1978ம் ஆண்டு தொடக்கம் விவேயுடன் அறிமுகமானேன். வங்கியில் பல பதவிகளையும், வெற்றிகளையும் சாதித்து, இல் வாழ்விலும் சந்தோஷத்தையும் அன்பையும் பெற்று, தாய் தந்தையருக்கு ஒரு உத்தம புத்திரனாகவும், சகோதரங்களுக்கு ஒரு அன்பு சகோதரனாகவும், கமலாவிற்கு ஒரு பாசமிகு கணவனாகவும் பிரஸ்நவிக்கு ஒரு அன்புத் தந்தையாகவும் உற்றார் உறவினர்களும் நண்பர்களுக்கும் மறக்க முடியாத ஒரு உத்தமனாகவும் வாழ்ந்து முடித்தார்.

விவேயுடைய ஆத்மா இறைவனின் திருவடிகளில் சென்று அமைதி பெற நாம் எல்லோரும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

விவேயுடைய ஆத்மா இறக்கவும் இல்லை, இறக்கப்போவதும் இல்லை.

BHAGAVD GITA says -

" The soul has no birth or death. The soul is not destroyed when the body is destroyed. The soul neither destroys nor can be destroyed. It is only bemused person who thinks that it is the soul that is destroyed.

The bodies are for soul just like clothes are for us. Just as we discard worn garments the soul discards worn out bodies and accepts new ones.

Birth and death are unavoidable matters. Do not lament over them because those who are born will certainly die one day and those who die will be born again one day."

ஓம் சாந்தி!

R. SRI PATHMANATHAN
(Rtd) Chief Manager - Bank of Ceylon
Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி இழந்து விட்ட சேவையாளன்

இலங்கை வங்கியின் குறிக்கோள் வாடிக்கையாளருக்குச் சிறந்த சேவை செய்து நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதேயாகும். அதற்கு அர்ப்பணிப்புள்ள பணிக்குழு வேண்டும். அத்தகைய பணிக்குழுவினரில் அர்ப்பணிப்புடன் வாடிக்கையாளருக்குச் சேவை செய்து ஓய்வுபெற்றவர் **அமரர். வி.விவேகானந்தா.** அமரரை நான் நீண்ட நாட்களாக நன்கு அறிவேன். இலங்கை வங்கியின் தம்பதிகளாக பணிசெய்து சிறப்புற்றவர்களாக இவர்கள் கருதப்படுகின்றனர்.

திரு.வேலுப்பிள்ளை விவேகானந்தாவின் மறைவு செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன். காலம்சென்ற திரு.விவேகானந்தா 1978ம் ஆண்டு இலங்கை வங்கியிலே கனிஷ்ட லிகிதர் / உதவி காசாளராக தனது வங்கி வாழ்க்கையினை ஆரம்பித்தார். கடந்த 33 ஆண்டுகளாக இலங்கை வங்கியிலே பணிபுரிந்த திரு.விவேகானந்தா, மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல கிளைகளிலும் பல்வேறுபட்ட நிலைகளில் கடமையாற்றியுள்ளார். தனது வங்கி வாழ்க்கையில் வாடிக்கையாளர்களிடம் இன்முகம் காட்டி பண்பாக பழகிய இவர் வாடிக்கையாளர்களிடம் சளைக்காமல் அளவளாவி அவர்களின் தேவையினை நிறைவேற்றுவதில் வல்லவர். தனது வாழ்நாளில் 33 வருடங்களை வங்கிக்காக அர்ப்பணித்த இவர் கடந்த 2011ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரியாக எமது வாழைச்சேனை கிளையில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். தனது வங்கி சேவைக்காலத்தில் ஊழியர்களோடும், வாடிக்கையாளர்களோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகி அனைவரது மனங்களிலும் இடம்பிடித்துக் கொண்ட இவர் தனது வாழ்க்கை துணையையும் எமது வங்கியிலே தேடிக் கொண்டார். கடைசியாக தனது மனைவியையும் ஒரு பெண் குழந்தையையும் ஆற்றா துயரில் தனியாக விட்டு கடந்த 20.07.2012 அன்று தனது பூவுலக வாழ்க்கையினை நிறைவு செய்து இயற்கையெய்தினார். அன்னாரது மறைவினையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**மா.ஜே.பிரபாகரன்**
பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக்கரம் நீட்டிய உத்தம நண்பன்

எங்கள் அனைவருடனும் மிகவும் அன்பாகவும் பாசமாகவும் பழகிய நண்பன் விவேகானந்தன் இன்று எங்கள் மத்தியில் இல்லை. ஆனால் அவர் இலங்கை வங்கியில் ஏறக்குறைய 34 வருடங்கள் ஆற்றிய அரும் பெரும் சேவையையும் சமூக சமயப் பணிகளையும் மக்கள் இன்றும் நினைவு கூர்ந்து பாராட்டுகின்றார்கள்.

நானும் மனைவியும் நண்பர் விவேகானந்தனின் பூதவுடலைத் தரிசிப்பதற்காக அவருடைய இல்லத்திற்குச் சென்ற போது அவரின் மனைவி கமலா 1/2 மணித்தியாலத்திற்கும் மேலாக தேம்பித் தேம்பி அழுதார். எவ்வளவோ விடயங்களைச் சொல்ல முயன்றும் முடியாமல் தவித்தார். மற்றவர்கள் அனைவருடனும் கள்ளம் கபடம் இல்லாமல் சொந்த பந்தங்களை அவர் அரவணைத்து வாழ்ந்த விதம் தன்னை மிகவும் கவர்ந்ததாக அவர் சொல்லி அழுதார். விவேயிடம் இருந்த அரும்பெரும் குணங்களை அவர் பட்டியலிட்டுச் சொன்ன போது நாங்கள் இருவரும் கண்கலங்கி விட்டோம்.

நான் இலங்கை வங்கியில் ஏறக்குறைய 38 வருடங்கள் சேவை ஆற்றிய காலத்தில் நண்பன் விவேயுடன் 25 வருடங்களுக்கு மேலாக கடமை புரிந்துள்ளேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கிளைகளில் நான் முகாமையாளராகவும், மாவட்ட முகாமையாளராகவும் சேவை ஆற்றிய வேளையில் விவே மட்டக்களப்பு, செங்கலடி, வாழைச்சேனை, காத்தான்குடி, ஓட்டமாவடி ஆகிய கிளைகளில் கடமை புரிந்தார். மேலதிகாரி என்ற ரீதியில் ஆகக் கூடுதலான காலப் பகுதியில் அவருடன் கடமை புரிந்தவன் நான் தான் என்று துணிந்து கூறுவேன். அதனால் அவருடைய ஒவ்வொரு நடவடிக்கையும் எனக்கு நன்றாக தெரிந்திருந்தது. நான் மட்டக்களப்பு கிளையில் முகாமையாளராக இருந்த போது பல ஜோடிகள் திருமண வாழ்க்கையில் இணைந்தன. அதில் **விவே - கமலா** ஜோடியாக இருந்தார்கள். அந்த குறிப்பிட்ட 4 அல்லது 5 ஜோடிகள் ஒரே கிளையில் சேவை செய்ய அனுமதி வழங்கா விட்டாலும் அத்தனை ஜோடியும் மட்டக்களப்பு கிளைக்கு பின்னேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேரும். ஒன்றில் ஆணோ அல்லது பெண்ணோ மட்டக்களப்பு கிளையில் வேலை செய்வார்கள். அது எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான காலமாக இருந்தது. ஒரு குடும்பம் போன்று அந்த ஜோடிகள் வருவதும், மகிழ்வதும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்பதும், விடை பெற்றுச் செல்வதும் எங்களுக்கு கண்கொள்ளா காட்சியாக இருக்கும். அப்போதிருந்தே விவே மிக மகிழ்ச்சியாகவும், கலகலப்பாகவும் வாழ்ந்து வந்தார். அவருடைய இளமைக்காலம் தான் இன்றும் என் கண்முன் நிழலாடுகின்றது.

வேளைக்கு வேலைக்கு வருவதும், உயர் அதிகாரிகளை மதிப்பதும், சக ஊழியர்களுடன் நட்புறவாக பழகுவதும், வாடிக்கை யாளர்களை கண்ணியமாக நடத்துவதும், நண்பர்கள் வேலை நேரத்தில் தத்தளிக்கும் போது கைகொடுத்து உதவுவதும், அன்றாட வேலைகளைத் திறம்படி செய்து முடிப்பதும், விவேயிடம் இருந்த சிறப்பம்சங்களாகும்.

இக் குணாதிசியங்களைக் கொண்டிருந்த விவே 3 சந்தர்ப்பங்களில் வேலைப்பழுவைக் குறைப்பதற்கு உதவி செய்தார். 1992ம் ஆண்டு நான் மட்டக்களப்பு கிளையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டேன். அப்போது மாவட்ட முகாமையாளராக இருந்தவர் ஓய்வு பெற்றுச் சென்ற போது வேறு ஒருவர் அதற்கு நியமிக்கப்படவில்லை. மாவட்டக் காரியாலயத்தையும் பொறுப்பு ஏற்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அந்த இரு கடமைகளையும் செய்யும் போதுதான் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் நடமாடும் விஞ்ஞான தொழில் நுட்ப கண்காட்சியொன்று இலங்கை வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதிலே சகலவித சேமிப்பு கணக்குகளையும் அங்கு வரும் மாணவர்களுக்கு திறக்க வேண்டுமென பணிக்கப்பட்டோம். சகல கிளைகளிலும் இருந்து ஊழியர்கள் வந்து தொண்டாற்றினார்கள்.

அதிலே விவேயும் விடுமுறை நாட்கள் என்றும் பாராது இரவு பகலாக முன்னின்று உழைத்தார். அதுபோன்றுதான் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக வேண்டி காத்தான்குடி கிளையில் ஆயிரக்கணக்கான சேமிப்பு கணக்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த காலப்பகுதிக்குள் திறக்க வேண்டி ஏற்பட்டது. அப்போது மாவட்ட காரியாலய ஊழியர்களுடன் சேர்ந்து விடுமுறை நாட்கள் என்றும் பாராது வந்து கணக்குகளைத் திறப்பதற்கு உதவினார்.

அது மாத்திரமல்ல. வாழைச்சேனை, செங்கலடி, காத்தான்குடி கிளைகளில் ஊழியர் பற்றாக்குறை ஏற்படும் போது சில நாட்கள் யாரையும் அனுப்புவதாக இருந்தால் பெரும் சிரமமாக இருக்கும். அதிகமான ஊழியர்கள் விரும்புவதில்லை. ஆனால் விவே பல தடவைகளில் அங்கு கடமைக்குச் சென்று உதவினார். இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் எங்களுக்கு உதவிக்கரம் நீட்டிய உத்தம நண்பனாக இருந்தார். 2006ம் ஆண்டு நான் பதவி உயர்வு பெற்று கொழும்பிற்கு சென்ற போது அவரோடு இருந்த தொடர்பு குறைந்து விட்டது. ஆனாலும் என்னோடு கடமை புரிந்த ஊழியர்களை நான் ஒவ்வொரு புதுவருடத்திலும் வாழ்த்த தவறியதில்லை. ஏனென்றால் "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு" என்றான் வள்ளுவன். விவே இறுதியாக ஓட்டமாவடி கிளையில் இருந்து என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கும் கமலாவுக்கும் அனுப்பிய புதுவருட வாழ்த்து கிடைத்து விட்டதாக நன்றி கூறினார். அதுதான் நான் இறுதியாக அவரோடு கதைத்த சந்தர்ப்பமாக இருந்தது.

விவேயை இழந்து தவிக்கும் அவருடைய மனைவி கமலா, மகள், உற்றார் உறவினர் நண்பர்கட்கு எவ்வாறு ஆறுதல் கூறலாம் என்று எனக்குத் தெரியவில்லை. விவேயின் மறைவு எல்லோருக்கும் ஒரு பேரிழப்பாகும். அன்னாருடைய ஆத்மா சாந்தி பெற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

**இரா. நல்லையா**
ஓய்வு பெற்ற இலங்கை வங்கி
பிரதம முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி துயர் பகிர்தல்

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடுதல் வேண்டியே
வளமான வாழ்விலுக் கோர்
நல்லதுணை யாயிருந் தென்னாளு மென்நெஞ்சில்
நீங்காத இடம் பிடித்ததே
அன்பினைச் சொரிந்தெந்தன் உயிரினுக் குயிராகி
அணையாத ஜோதி யாகி
அளவில்லா மகிழ்வூட்டி ஒளியேற்றி வழிகாட்டி
வாழ்வளித்த என் தெய்வமே

மின்னாமல் முழங்காமல் வருகின்ற மழைபோலே
மாயமாய் மறைந்த தேனோ
விதிசெய்த சதியோவென் முன்வினைப் பயனோவென்
றொன்றுமே அறிகிலேன் யான்
கண்ணீருக் கடிமையாய் கம்பலைக்கோர் உறைவிடமாய்
கலங்கி நான் தவிக்கின் றேனே
காலமெலா மும்நினைவு வாட்டியெனை வதைத்திட
கரைந்துருகும் நிலையேன் ஈந்தாய்

உற்றாரும் உறவினரும் பெற்றோரும் நீரென்று
வாழ்ந்திட்ட வாழ்வு இன்று
பொய்யாகி வெறுங்கனவாய் மாயமாய் மறைந்திட்ட
விந்தையைப் பாரு மையா
எங்கு பார்த்தாலும் உன் உருவம் தெரியுதையா
சொல்லுதற் கரியபெரும் வேதனைச் சுமைகளெனத்
துயர்க்கடலில் ஆழ்த்தி னாலும்
தெய்வத் திருவேயுன் ஆன்மா பரமபதம்
சேர்ந்திட நான் வேண்டு கின்றேன்.

அன்பு மனைவி,
**கமலாதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பாவுக்கோர் ஆசை மடல்

அப்பா, அப்பா, அப்பாவே
என் ஆசை அப்பாவே
என் அன்பு அப்பாவே
எங்கே சென்றாயோ எங்கே சென்றாயோ
ஆஸ்பத்திரிக்கு போனது என்று
அம்மா சொன்னாவே
ஏன் இன்னும் வரவில்லை. ஏன் அப்பா
வீட்டிற்கு வரவில்லை. அப்பா வருவார்
என்று அம்மா சொன்னாவு. ஏன்
எங்களிடம் கோபம் என்று கேட்கிறா
இல்லை மகள் அப்பா வருவார் என்று
அம்மா பொய் சொன்னாவு
கடவுளிடம் போய் விட்டார்
என்று சொன்னார்கள் மாமாவிடம்
கேட்டேன் வருவார் வருவார் என்று –
அம்மாவிடம் கேட்டால் வருவார்
என்று சொல்லி அழுகிறார் அம்மா
என்னையும் கடவுளிடம் கூட்டிச்
செல்லு என்று நான் அழுகின்றேனே
அப்பாவே. நான் பாடசாலை
செல்ல ஆயத்தமாகும் போது என்னை
தழுவி முத்தமிட்டு போய் வா –
என்று கூறுவாயே அப்பாவே
நான் யாரிடம் செல்வேன் அம்மா
மட்டும் தானா என்னை அரவணைப்பது.
என்னை அரவணைக்காது சென்றது
ஏன் அப்பாவே. விரைவில் வீட்டிற்கு வந்து விடு அப்பா
இத்துடன் என் ஆசை மடலை முடிக்கிறேன்.

அன்பு மகள்
பிரஷ்ணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன் துயர் பகிர்தல்

அன்புள்ளம் கொண்டவரே
அறிவுரைகள் பகிர்பவரே
சிந்தையைக் கொள்ளை கொள்ளும்
சிரிப்பொலியி னால் மயக்கி
இன்சொற்கள் பேசியெனை
மகிழ்வூட்டும் என்மாமா
உங்கள் பிரிவு எனை
வாட்டி வதைக்குதையா

கண்ணீர்க் கடலினிலே
தத்தளிக்க எனைவிட்டுச்
செல்வதற்கு உங்களுக்கு
ஏனிந்த அவசரமோ...?
பாச மழை பொழியப்
பாரினிலே யாருமில்லை
நேசக் கரம் நீட்ட
நீள் நிலத்தில் எவருமில்லை

தன்னந் தனியாகி
அழுகின்றேன் ஊமையாக – ஆனாலும்
பண்பின் பிறப்பிடமே
பாசத்தின் உறைவிடமே
அன்பின் சிகரமே
ஆருயிரே என் மாமா
உங்கள் ஆன்ம சாந்திக்காய்
ஆண்டவனை வேண்டுகின்றேன்

சாயிதர்சன்
ஆரையம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாய் விவேகானந்தா...?

## வெண்பா

கரவருஷம் கடந்துவரும் ஆடிமாதம்
பூரணமான சுக்கிரன் நாலைந்தில் – தாராளமாய்
தன்னம்பிக்கையுடன் வாழ்ந்த விவேகானந்தா
விண்ணுலகம் சென்ற நாள்

வேலுப்பிள்ளை மகேஸ்வரி பயந்த மைந்தன்
விவேகத்தில் நாமங் கொண்ட விவேகானந்தா
போலுருக் கொண்டு நீ கல்லடி உப்போடையில்
பெற்றோருடன் பெருமையாய் வாழ்ந்து வந்தாய்
நாலுருக் கொண்டவர்க்கு சகோதரனாய்
நானிலத்தில் நீயும் வாழ்ந்த காலை
காதலித்து ஆரையூர் கமலாவதியையும்
கனிவுடன் திருமணம் நீ செய்து கொண்டாய்

மட்டுநகரில் மாடி மனை அமைத்து
மனைவி மகளுடன் நீ வாழ்ந்தும் வந்தாய்
மட்டற்ற மகிழ்ச்சியில் நீ திளைத்த வேளை
மாறாத நோய் உன்னைப் பிடித்ததையா
திட்டமுடன் நீ தொட்ட கருமமெல்லாம்
திசைமாறி போச்சுநண்பா என் செய்வேன்
கட்டழகன் உன்னை இனி காண்பதெப்போ
கலங்குகின்றோம் கண்ணீர் விட்டழுகின்றோமே

இல் துணையாய் நீ இருந்தாய்
என் நண்பி கமலாவுக்கு
சொல்லவொண்ணா துயரதனால்
துடிக்கின்றாள் உன் மனைவி
பல் துணையாய் நீயிருந்து பார்த்த
உன் பாசமகள் பிரஷ்ணவியும்
எல்லாமே எனக்கு அப்பாதான் என்று
ஏங்கி ஏங்கித் தவிக்கின்றாள் விவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புடன் பழகிடுவாய்
பலபேருக்கும் உதவிடுவாய்
நண்பனாய் எங்கள் குடும்பத்துடன்
நாடியே பழகி வந்தாய்
கண்ணிலே கனிவு கொண்ட
அண்ணலே விவேகானந்தா
உண்மையாய் உழைத்து நீயும்
உயர் பதவி பெற்றாய் நண்பா

எம்மோடு சேவை செய்த காலம் தொட்டு
எப்போதும் மறவாதெம் இல்லம்வந்து
உம் இனிய குணத்தாலே கொள்ளை கொண்ட
உற்ற நட்பின் உயர்ச்சியை என்ன சொல்ல
எம் இலங்கை வங்கியிலே எங்களுடன் இணைந்திருந்த
இரக்கமுள்ள நண்பனே விவேகானந்தா
தேம்பியழ எங்களை நீ வைத்து விட்டு
திசைமாறிச் சென்ற தென்ன நண்பா நீ சொல்

பாசத்தை பிழிந்த உன் மனைவி மகளைப் பாதுகாத்து
பார்போற்ற உறவாடி அரவணைத்து
நேசமுடன் வாழ்ந்திருந்து அவர்களைத் தவிக்கவிட்டு
நீங்காத துயில் கொண்டதேனோ நண்பா
பாச மழை பொழிந்து வாழ்வில் பழகுதற்கு
பாரினிலே அவர்களுக்கு இனி யாருமில்லை
காசு பணம் பெரிதில்லை அவர்களுக்கு உன்
கனிமுகத்தின் சிரிப்பொலி போதும் நண்பா

எங்களுடன் நீ சேவை செய்த காலமெல்லாம்
இனிய முகம் காட்டி எமை ஆதரித்தாய்
பங்க மேதும் பதவிக்கு வந்திடாமல்
பட்சமுடன் பணிவுடன் சேவை செய்தாய்
உங்களிடம் நாம் கேட்கும் உதவியெல்லாம்
உன்பணியாய் நின்று உஞற்றிடுவாய்
தங்களின் பண்பு இதுதான் என்று நீயும்
தரணிக்கு காட்டிச் சென்றாயோ சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கிக்கு வருகின்ற கஸ்ரமர்க்கு
இன்னல்கள் பலவற்றைக் களைந்து நிற்பாய்
பல பேருடன் பலவிதமாய் நயந்து பேசி
பாசமுடன் சகோதரனாய் நடந்து கொள்வாய்
சிலசமயம் வருகின்ற பிரச்சனைக்கு
சிரம் தாழ்த்தி நீயும் தீர்த்து வைப்பாய்
கலகலப்பாய் பேசுகின்ற விவேகானந்தா
கண்மூடி நீயும் எங்கு சென்றாய்

முகாமையாளராக நீ இருந்த போதும் கூட
முன்னுரிமை பாகுபாடு காட்டவில்லை
சிவா, சுசிலா என்றெங்களை
செல்லமாக நீ அழைத்திடுவாய்
மகா பெரிய தப்புக்கள் செய்த போதும்
மன்னிக்கும் குணம் உனக்கு உண்டு
இனமத பேதம் காட்டாத இனிய நண்பா
இறைவனின் சாந்தி என்றும் உனக்கு உண்டு

உங்கள் ஆத்ம சாந்திக்கா விழி நீருடன்....

**சிவரெட்ணம் சுசிலா குடும்பத்தினர்**
மட்டக்களப்பு.

## அன்பு நண்பா

பண்பாய் பாசத்தால் உயர்ந்து நின்று
அன்பால் அனைவரையும் வழிநடத்தி
என்றும் கலையாத - உன் கலகலத்த
பேச்சுகளும் கனிவோடு நீ புரியும்
கடமைகளும் கண்ணிமைக்கும் பொழுதில்
எமை பிரிந்த பின்பும் - என்றும்
எமை விட்டு விலகவில்லை.......
விவேகானந்தாவின் நினைவுகள்........

**இலங்கை வங்கி**
**வாழைச்சேனை ஊழியர்கள் அனைவரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் பூத்த மலர் "விவே"
# உள்ளம் கவர்ந்த ஊழியன்

அன்புத் தாய் மடியில் பூத்த ஆசை மகன் "விவே"!
அன்னை, தந்தை அகம் மகிழ்ந்த அன்பு மகன் "விவே"!
அன்புச் சகோதரர்களின் அருமைப் பூஞ்சிட்டு "விவே"!
அன்புக் கூட்டிற்குள் வளர்ந்த அன்புச் செல்லம் "விவே"!
கல்லூரி வாழ்க்கை முடிந்ததும் வங்கிக்குள் வந்தாய்
கரும பீடமதில் கலகலப்பாய், கண்ணியமாய் கடமை செய்தாய்
வாடிக்கையாளர் தேவைகளை பூரணமாய்ச் செய்து கொடுத்தாய்
தேடி வங்கிக்குள் நாடி வருபவரை "அக்கா, அம்மா" என அழைப்பாய்
செல்லச் சிரிப்பழகும், "சினம் கொள்ளாப் பேச்சழகும்"
உல்லாச நடையழகும், உன் நளின முகத்தழகும்
மெல்லப்பேசி "குசும்புகள்" பகிர்ந்து மகிழ்ந்திடும் உன்
வல்லமை எல்லோருக்கும் வரவே வராது "விவே"
அசையும் தென்றல் இசைபாடிய அந்த வேளையில்
உலவும் "நிலாப் பெண் கமலாவை" உன் உள்ளம் பற்றினாய்
நிலவிய காலமதில் சில காலம் குலவிக் களிப்புற்று
கண்ணுக்குக் கண்ணாக கமலாவின் இதயத்தில் இடம் பிடித்தாய்
கமலாவின் நா உன் நாமம் "விவே விவே" என்றே உச்சரிக்கும்
சுகமாக இருவரும் ஒரே வங்கிக் கிளையில் கடமை புரிந்து
பதவி உயர்வினில் பணியாற்றி பல கிளைகளில் மனமார,
இதமாக, இசைவாக இனிமையாகப் பணி புரிந்தாய்
புகழ் நிலைத்திட வேண்டுமெனில் "வீடு கட்ட வேண்டும்" இல்லை
"புத்தகங்கள் யாத்திட வேண்டும்" என்ற பெரியோர் சொற்கிணங்க
"வானுயர்ந்த கட்டிடங்கள்" "வரிசையாகக் கடைகள்"
ஆசையாய் நின்று அழகழகாய்க் கட்டினாய் விவே
சுகம் விசாரிக்க வீடு வந்தால் நன்றாக உபசரிப்பாய்
அகம்தனில் வஞ்சமில்லாது வீட்டின் அறைகள் ஒவ்வொன்றாய்
கஷ்டங்கள் பாராமல் இருட்டென்று சலிக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத நேரத்திலும் கூட காட்டி மகிழ்ந்திட்டாய்
கமலாவிற்கு "நீ செல்லம் உனக்கு கமலா செல்லம்"
இணைந்த இரு செல்வங்கட்கு "பிரஷ்ணவி" "குட்டிச் செல்லம்"
உள்ளம் தொட்டு உணர்வு தட்டி இணைந்த காதல்
கள்ளம் கபடமில்லா அன்புக் காதல் "என்றும் அழிவதில்லை"
காலனும் கடிதே விரைந்திட்டான் உன் உடலைக் காவு கொள்ள
இளைப்பாறும் காலம் சேவையில் ஐம்பத்தைந்து "ஆறுதல் கால வயது"
களைப்புறும் உடல், மனம் சற்று ஓய்வு பெற விளையும் காலம் அது
அமைதி தேடும் நேரம் காலன் "கணை" தொடுத்ததும் ஏனோ?

"அன்றெழுதிக் கணக்கிட்ட அரனார் ஒரு புறம்"
"இன்னும் நாட்கள் இருக்கென்று கணக்கிடும் மனிதன்" மறுபுறம்
"மரணம் இது தருணம்" என்று வந்திடும் வேளை
"கரணம்" போட்டுத் தப்ப வழியில்லாது "வேதனை காண்பவன் மனிதன்"

"நினைவுகள், - உணர்வுகளோடு" சங்கமிக்கும் போது,
"கனவுகள், கற்பனைகள்" நிஜமாக, நிழலாக வரும்
"நித்தம் நித்தம்" வாழ்வில் அசைந்து கொண்டு
ஜெயிக்கும் ஆற்றலையும், மறக்கும் சக்தியையும் தரும்

அன்புத் தோழி கமலா! அருமைச் செல்லம் பிரஷ்ணவி!
உங்கள் தூய அன்பு உள்ளவரை "விவே"
உங்களுடன் வாழ்ந்து கொண்டே இருப்பார்
எல்லாம் வல்ல இறைவன் உங்களுடன் இருப்பாராக!
ஆறுதலும், அன்பும் தந்து தெளிவான சிந்தனை
செயலாற்றல் தரவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஆறுதல் கூறும்
அன்புத் தோழி
**திருமதி. வசந்தினி குழந்தைவேல்**
இலங்கை வங்கி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எங்கள் நெஞ்சம் நிறைந்த விவே

அன்பான விவேகானந்தாவின் மறைவு ஆழ்ந்த துக்கத்தை விட அதிர்ச்சி தான் எங்களுக்குத் தந்தது. அவரை சோதனைக்கு உட்படுத்திய வைத்திய நிபுணர்கள் எல்லோரும் அவர் குணமடைந்து வருவதாகவும் விரைவில் நல்ல முன்னேற்றம் ஏற்படுமென்றே சொல்லி வந்தனர். எனவே அவருடைய திடீர் மறைவு எங்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியது.

சில காலம் நாங்கள் மட்டக்களப்பை விட்டு வெளி இடங்களில் சீவிக்க வேண்டி இருந்ததால் "விவே" தம்பதியினரின் நெருங்கிய நட்பு சற்று இடைவெளிப்பட்டிருந்தது. 2006ம் ஆண்டு நாங்கள் திரும்பவும் மட்டக்களப்பிற்கு குடி வந்ததோடு அவர்களுடைய தொடர்பு மீண்டும் கிடைத்தது.

கடந்த ஆறு வருடங்களாக இந்த தம்பதிகளுடன் நாங்கள் வெகு நெருக்கமாக பழகி வந்தோம். விவேயின் குழந்தைத் தனமும் யாரையும் பாசத்தால் வென்றுவிடக் கூடிய பண்பும் இவருடைய சிறந்த குணாதிசியங்களாகும். மற்றவர்களுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் அது தன்னுடைய சொந்த பிரச்சனை என்று மனதில் கொண்டு அதற்கு பரிகாரம் தேடுவதில் விடாமுயற்சி எடுக்கும் நல்லதோர் மனிதர் அவர். வேலை நிமித்தம் அவரோ அல்லது நாங்களோ சில நாட்கள் சந்திக்காவிடில் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் சந்தித்து பல மாதங்களாக காணாதவர்களை கண்டது போல் நினைத்து பாசம் பொங்க அலவளாவிக் கொண்டிருப்பார். அவருடைய பாசம் கலந்த அன்பின் பிரதிபலிப்பு அது.

விவே தனது வங்கி சேவையினால் எல்லோருடைய நன்மதிப்பையும், தனது இனிய வார்த்தைகளினால் அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசிகளையும் பெற்று திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. அன்னாருக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் தோள் கொடுத்து தாங்க எத்தனையோ பேர் முன்வந்துள்ளமை இதற்கு சான்றாகும்.

அவர் தனது உடன் பிறப்புக்களுடனும் அவர்களுடைய பிள்ளைகளுடனும் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அன்னாரின் பூதவுடல் இறுதி தகன கிரியைகளுக்காக எடுத்துச் செல்லும் போது அந்த சிறார்கள் வீதிவரை வந்து கதறி அழுது புரண்ட காட்சி எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

அவருடைய துணைவியார் கமலாவும் பொறுப்புமிக்க வங்கி முகாமையாளராக இருந்த போதிலும், தன்னுடைய கணவனுக்கு ஈட்டும் கடமைகளில் எந்தவொரு குறையும் வைக்கவில்லை. தனது கடமைகளை கடமை என்று பாராது அன்பும் பாசமும் நிறைந்த சேவை என்றே மனதில் கொண்டு எப்போதும் இன்முகத்துடன் பணிபுரிந்து வந்தார்.

எங்களுக்கே விவேயின் பிரிவு சொல்லொனாத் துயரத்தை தருகின்றது என்றால் கமலாவும், அன்பு மகள் பிரஷ்ணவியும் விவேயின் பிரிவால் என்ன மன வேதனை அனுபவிப்பார்கள் என்று நினைக்கவே முடியாமல் இருக்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.திருமதி விஸ்வநாதன்**
(Rtd) Asst. General Manager
People's Bank



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைந்தனை ஐயா விவேகானந்தா

விவேகானந்தா?
விவேகமும் வேகமும்
விளைந்தவன் நீயோ?

இத்தனை விரைவில்
இருபது எழில் (20.07.2012)
பொற் பதம் அடைவாய்
என்றெவர் நினைத்தார்?

நட்பும் உன்றன்
நகைச்சுவைப் பேச்சும்
அற்புதம் ஐயா
அகங்களில் குளிரும்
எப்படி மறப்போம்
ஏங்கினோம் நண்பா

இலங்கை வங்கியில்
இலங்கினாய் நீயும்
பதவியில் உயர்ந்தாய்
படிபல கடந்தாய்
உதவி முகாமையில்
உயர்ந்தும் இருந்தாய்

ஐம்பத்தைந்து அகவையில்
ஏனோ
ஓய்வினைப் பெறவும்
முந்திக் கொண்டாய்

இத்தனை வேகம்
எப்படி ஐயா?

ஓய்வினைப் பெறுகிறாய்
என்றுதான் இருந்தோம்
உலகினை விட்டுமா?

சிவபதம் அடைந்து
சிறப்பினைப் பெறுக

நல்லவர் என்றுனை
ஊரெலாம் சொல்லும்
பிள்ளைகள் பத்தினி
பிரார்த்தனை வெல்லும்

**இலங்கை வங்கி**
**முனவ்வரும், நண்பர்களும்,**
**அக்கரைப்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்தவர் விவே!

கள்ளமின்றிப் பழகும் கருணை மிக்கவர்
"உள்ளம் கவர்ந்த ஊக்கமுள்ள ஊழியர்"
ஒழிவு மறைவின்றி உள்ளதைப் பேசுபவர்
தெளிவுடன் விடயங்களைத் தெரிந்து கொள்பவர்
செங்கலடி, வாழைச்சேனை வங்கிக் கிளைகளில்
என்னுடன் ஒன்றாக வேலை செய்தவர்
இன்முகமும், மூத்தவர்களை மதிக்கும் நல்லவர்
"வண்ணமான எழுத்தும் செயலாற்றலும் கொண்டவர்"
கணனி அறிமுகமில்லாத காலமதில் வேலைகளை
சேமிப்புப் பகுதி, கரும பீடம், நடைமுறைப் பகுதி
காசோலைத் தீர்வுப் பகுதி, வெளிநாட்டு காசோலைத்தீர்வு என
வங்கியினுள் முழுமையாய் திறமையை வெளிப்படுத்தியவர்
கஷ்டமென்று சொல்லாமல் தனக்கென்று பணித்த வேலைகளை
இஷ்டமுடன் நிறைவேற்றி மகிழ்ச்சியுடன் செயற்பட்டவர்
இஷ்ட தெய்வமான பேச்சியம்மன் ஆலய தன் தந்தையாரின்
கடமைகளை மனமாரச் செய்து திருப்தி கண்டவர்
இளைப்பாறும் வயது ஐம்பத்தைந்தில் சேவையில் நிறைவு கண்டு
சளைக்காமல் கட்டிய தன் இல்லமதில் ஒர் வருடம் வாழ்ந்து
நோயுற்ற போதும் *"Iam All right"* என்ற வார்த்தை சொல்வார்
வாயில் வரும் வார்த்தை நம்மை ஆறுதல்படுத்தும்
"கமலாவின் நெஞ்சில் நிறைந்தவர் அது போல்"
"பழகிய எல்லோர் மனதிலும் நிறைந்தவர்" அவர்
இப்போதும் அவர் மறைந்தவர் போல் அல்ல
எப்போதும் எல்லோர் நெஞ்சிலும் அவர் நிறைந்தவர் தான்

அன்பு மனைவி கமலா! ஆசைக் குழந்தை பிரஷ்ணவி!
இன்பமுடன் உங்கள் இருவர் நெஞ்சிலும் "விவே"
"தன்னுயிரைப் பதித்து உங்களுடன் அவர் இருக்கின்றார்"
அன்புடன் ஆறுதல் கூறி என் நட்பினை வெளிப்படுத்துகின்றேன்

**திரு. க. சாமித்தம்பி**
உதவி முகாமையாளர்
இலங்கை வங்கி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் நினைவஞ்சலி

அழகு தமிழ் ஊராம்
கல்லடி பதியினிலே
கண்மலர்ந்த
விவேகமுறு விவேகானந்தா
ஆனந்த வாழ்விற்கு
ஆகாயம் சென்றீரோ......

பேச்சி அம்மன் பாதத்தில் சரண்புகுந்து
தொழுதீர்
பேரேறுரிளம் பெற்று பெருமையுடன்
வாழ்ந்தீர்
பேச்சி அழைத்தாளோ பேசாமல்
நீர் சென்றீர்
தாயின் பாதத்தில் ஐக்கியம்
ஆகிட சென்றீரோ?

விந்தை மிகு உலகினிலே
சாந்தமுடன் வாழ்வமைத்து – நல்
இசை போல இனிமையுற்று
இசைபாட மனிதராய்
வள்ளலாய் வாழ்ந்தீரே – இன்று
தசை கொண்ட உடலாய் கிடப்பதேனோ?......

கமலாவதியை கரம்பிடித்து
கனிவுடன் இல்லறம் அமைத்து
புனிதமான உறவில்
பூத்த பிரஷ்ணவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரிப்புற்று வாழ்ந்தீர் – இன்று
சரிந்து போனீரே – கண்ணீர்
சொரிய வைத்தீரே......

கனிவுடன் கதைபேசி
பணிவுடன் பணியாற்றி
துணிவுடன் முன்னேறி
இனிமையுடன் வாழ்ந்தீரே – இன்று
தனித்து போனீரே – எமை
தவிக்க விட்டீரே........

தடைகள் ஆயிரம்
இடையில் வந்தாலும்
உடைத்து வெளிவரும்
படைக்கு உரியவர் – புவிக்கு
விடை கொடுத்தாரோ – தன்
நடைக்கு தடை விதித்தாரோ.....

நெஞ்சு வெடிக்குதையா – உன்
பிரிவு கண்டு ஏங்குதையா
கள்ளமற்ற உன் கண்கள்
கண்மூடி கிடக்குதையோ – அதை
காணவரும் கண்களெல்லாம்
கண்ணீரால் நிரம்புதையா......

"மனோ" என்று நீ அழைத்தால் – எம்
மனமெல்லாம் குளிர் அடிக்கும் – அந்த
மனம் கொண்ட வார்த்தையில் – எம்
மனமெல்லாம் நெகிழ்வுறும் – நல்
மனமிங்கே மௌனித்து கிடக்குறதே – எம்
மனங்கள் துடிக்குதையோ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலத்தில் ஞாயிறுவாய்
ஞானத்தில் நிகர்ந்தாய்
தானத்தால் பாரியாய்
வானத்திற்கு உயர்ந்தாய்
காலனின் சதியாலே – அந்த
வானத்திற்கே சென்றாயோ........

தேனிலும் இனிய விவேகானந்தா
தேடியும் இனி வருவீரோ – உன்
தேடல் முடிந்ததென்று – ஆகாய
தேவனிடம் சென்றீரோ
தேங்கி நிற்கும் உன் நினைவுகள்
தேராய் எம் நெஞ்சில் நகர்ந்து விடும்.....

அர்த்தங்கள் ஆயிரம் சொன்ன
அழகு தமிழ்க் கவிதை
அமைதியாய் சமாதி கொள்ள
அகிலத்தில் அக்கவிதை
ஆயிரம் முறை உச்சரிக்கப்படும்
அன்பு விவேகானந்தா என்று.......

ஆண்டவன் அணைத்த ஆன்மா
அவனிடத்தில் ஐக்கியமாக – உங்கள்
ஆத்மா சாந்திக்காய் – நாம்
அனைவரும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**வேலுப்பிள்ளை இன்பராஜ்,**
இலங்கை வங்கி
ஏறாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தனருள் பெற்று அமரர் ஆனாய்....

உலகு புகழ் உத்தமராம் இராமக் கிருஷ்ணர்
உன்னத சேவை நகர் கல்லடியூர்
நிலவுகின்ற நீள் புகழின் வேலுப்பிள்ளை
நிறை மகனாய் உதித்து குறை ஏதுமின்றி
புலவு கல்வி எட்டி முறை பயின்று நாளும்
இனிதாய் இலங்கை வங்கி பணியும் ஏற்று
பலவு மொருங்கான பண்பில் உயர்வு மெய்தி
உன்னத விவேகானந்தா உள்ளம் நன்றே.

உடனுழைத்த கமலாவின் கரமே பற்றி
பிரஷ்ணவியைத் திருமகவாய்த்திகழ வாய்த்து
கடமையிலே கண்ணுயிராய்க் காத்த காலம்
காட்டி யெமக் கன்பு மழை சொரிந்து நாளும்
விடாது பற்றி அன்பு மனை சுற்றத்தோடு
காண்பார்க்கு கார்கால மழையே போல
இடை விடாதிருந்து மனம் கோணா வண்ணம்
கனிவுடனே காத்து வந்த கருணையோனே

எல்லோர்க்கும் உறவினராய் உரித்தாய் வந்து
அன்போடும் பண்பான பரிகாசத்தால்
வல்லவனே வாய்த்த திரு மழலை போல
கண்ணாலே கவர்ச்சி கதை சொல்வாய் ஐயா
சொல்லாமல் துயருடலை நீத்து வான் தோய்
பேச்சியம்மன் பேரருளில் திளைத்தாய் நின்று
பல்காலம் நின் புகழைப் பேசிப் பேசி
இறை பதத்தில் இன்புறுக என்றே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமனாய் உடனிருப்போர் உயர்வு நாடி
பன்னெடுநாள் பாரினிலே வாழ்வீர் என்று
மெத்த மனம் நம்பியும் நாம் நொந்துபோனோம்
மேன்மையிடம் ஏகினையோ விரைவாகத்தான்
அத்தனருள் பெற்று அமரர் ஆனாய் தெய்வ
அடியவருள் கலந்து பெரு மோட்சப்பேறு
வித்தகனே வினையறுத்து வீடு பெற்று
பக்தியுறு பரம பதம் அடைந்தாய் அன்றோ.

செய் தொழிலே தெய்வமெனச் சிரத்தை காட்டி
நிறை பொலிவை இலங்கை வங்கி எய்தும் வண்ணம்
மெய் வியரா விடாதாற்றி விடை பெற்றே தாள்
கை கோர்த்த நண்பருடன் கலகலப்பாய்
அய்யகோ ஆண்டவனே முறையோ என்று
அலமந்து மாழ்கியே விதியோ தானோ
செய்ய திருவடியடைந்து சிறந்தோ துய்க்க
வல்ல பிரான் மலர்ப்பாதம் பணிகுவோமே!

**- மணிபூர் மாணிக்க சபாபதி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மரண அறிவித்தல்

மலர்வு
19
08
1956



உதிர்வு
20
07
2012

கல்லடி - உப்போடையை பிறப்பிடமாகவும்,
இல.296, திருமலை வீதி, மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். வேலுப்பிள்ளை விவேகானந்தா

(ஓய்வுபெற்ற முகாமையாளர் – இலங்கை வங்கி, ஓட்டமாவடி)

அவர்கள் 20.07.2012 அன்று காலமானார்.

அன்னார்

காலஞ்சென்ற திரு. திருமதி. வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும்
காலஞ்சென்ற திரு. திருமதி. கந்தப்பன் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்
கமலாவதி (முகாமையாளர் - இலங்கை வங்கி, ஏறாவூர் கிளை) அவர்களின் அன்புக் கணவரும்
பிரஷ்ணவி (மட் /வின்சன்ட் உயர்தரப் பாடசாலை மாணவி) அவர்களின் அன்புத் தந்தையும்
இராமகிருஷ்ணா (இலங்கை வங்கி - மாவட்டக் காரியாலயம், மட்டக்களப்பு)
நிவேதிதா (இலண்டன்), நளாயினி (இலண்டன்), சுகந்தி (ஆசிரியை - மட் /புளியடிமுனை அ.த.க.பா.)
ஆகியோரின் அன்புமிகு சகோதரரும்

த்யாநிதி (ஆசிரியை - மட் /மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயம்),
இந்திரகுமார் (இலண்டன்), விநாயகமூர்த்தி (இலண்டன்), சிறிதரராஜ்,
அமரர் Dr. நடராஜா, சொக்கலிங்கம் (ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்), குலசேகரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - நெல் சந்தைப்படுத்தும் சபை), தங்கவடிவேல் (ஓய்வுபெற்ற
நிருவாக உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை), அமரர் நல்லரெத்தினம், (அதிபர் - மட் /கிரான்குளம்
விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்
சதுர்ஷன்காந் அவர்களின் அன்புச் சித்தப்பாவும்
திவ்யா, வித்யா, பிரசாந், கீர்த்தனா, சஹானா, லக்ஷனா, வியூஷ்மா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 23.07.2012 திங்கட்கிழமை பி.ப. 04.00 மணிக்கு
தகனக்கிரியைக்காக கள்ளியங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

065 222 3309 - குடும்பத்தினர் -

Valampuri Screen, Batticaloa. 077 3083751



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.




- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் விவேகானந்தா
தனது சகோதரியின் குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய இல்லறமாய்......



வாழ்க்கைத் துணையோடு கைகோர்த்த அமரர் விவேகானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல மகளின் முதலாவது பிறந்தநாள் நிகழ்வில்
அமரர் தனது மகள் - மனைவியுடன்



உறவினர்களுடன் அமரர் விவேகானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தாருடன் கூடி மகிழும்
அமரர் விவேகானந்தா



அருமை மகளுடன் அமரர் விவேகானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கியின் 25வது வருடப் பூர்த்தியை
ஒட்டி வழங்கப்பட்ட விருது பெறும் அமரர் விவேகானந்தா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 20.7.2012ம் தேதி அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன் அன்புத் தெய்வம் வேலுப்பிள்ளை விவேகானந்தா அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிய உறவினர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் எம்மோடு துயர் பகிர்ந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தி விளம்பரங்கள் அச்சிட்டு, பதாதைகள், மலர் வளையங்கள் வைத்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் குறிப்பாக இலங்கை வங்கி மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி வங்கி முகாமையாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் மேலும் வங்கி ஓய்வூதிய சங்க தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் மட்டக்களப்பு சிலிங்கோ இன்சூரன்ஸ் ஸ்தாபனத்தினருக்கும் மட்டக்களப்பு B.C.A.S ஸ்தாபனத்தின் தலைவர் ஊழியர்கள், மஞ்சந்தொடுவாய் சாரதா வித்தியாலய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். மற்றும் அமரர் விவேகானந்தாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் அமரரின் 31ம் நாள் வெளியீட்டிற்கு ஆலோசனை வழங்கிய காசுபதி நடராசா, மகுடம் சஞ்சிகையின் ஆசிரியர் நண்பன் மைக்கல் கொலின் அவர்கட்கும் மலரை அலங்கரிக்க ஆக்கங்களை தந்துதவிய அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், மலரை சிறப்புற அச்சிட்டு உதவிய மைக்கல் மொபைல் பிரிண்டர்ஸ் ஸ்தாபனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தூய்மையும் வலிமையும் உள்ளவனாக இருந்தால்,
நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

- சுவாமி விவேகானந்தர் -



Michael's Mobile Printers
0774338878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org